# பொய்யா மொழியில் மழைநீர்ச் சுழற்சி

**OPEN ACCESS**

Volume: 13

Special Issue: 5

Month: March

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
*இரம்ஜான், பா. மற்றும் சி. அருள் மைக்கேல் செல்வி. பொய்யா மொழியில் மழைநீர்ச் சுழற்சி. Shanlax International Journal of Arts Science and Humanities*, Vol. 13, no. S1, 2026, pp. 89-97.

*Corresponding Author:
adonispeo@gmail.com

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS5-Mar.11098

***பா. இரம்ஜான்***
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு, இந்தியா

***சி. அருள் மைக்கேல் செல்வி***
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை, தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்**

*“நீரின்றமையாதுலகு” என்ற தொடரானது நீர் இல்லாமல் உலக மக்களது வாழ்க்கை மட்டுமல்லாமல் அனைத்து உயிர்களின் வாழ்க்கையும் இயங்காது என்ற பொருளைத் தருகின்றது. இது ஏற்புடையது எனினும் வள்ளுவரின் இத்தொடர் அறிவியல் நோக்கில் ஆழ்ந்த நோக்கங்களுக்கு வழிகோலுகின்றது. பொய்க்காது பெய்யும் மழையால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கையானது தொடர்கின்றது. ஆனால் மழை பெய்யாவிடில் கடலும் வற்றும், மழை இல்லையேல் பசும்புல்லான ஓரறிவுயிர் கூட இல்லாமல் அழிந்து போகும். மழை பொய்த்தால் உழவர் ஏர்ப் பிடித்து உழவுத் தொழில் புரியமாட்டார். உலக உயிர்களைப் பசி வருத்தும். வாழ்வைக் கெடுப்பதும் வாழ்வில் வளம் கெட்டு நொந்தவரைக் காப்பதும் மழை. மழை பொய்ப்பின் தானம் தவமிரண்டும் தவறிப் போகும். இது மட்டுமல்லாமல் ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் திருவிழாவும் நடைபெறாது போகும். இவை போன்று நீரினால் அடையும் நன்மைகளையும் அவலங்களையும் வான்சிறப்பு என்ற அதிகாரத்தின் வழியாகப் பொய்யில் புலவரான திருவள்ளுவர் மக்கள் மனத்தில் பதிய வைத்துள்ளார்.*

***திறவுச்சொற்கள்:*** *மழை, மழையின் வேறு பெயர்கள், மழைநீர்ச் சுழற்சி, வான்சிறப்பு, நீர் இல்லா உலகம், உழவு, பசி, தானம், தவம், அமிழ்தம், திருக்குறள்.*

**Abstract**

The phrase “The world cannot exist without water’ means that not only the life of the people of the world but also the life of all living beings cannot function without water. This is appropriate however, this phrase by valluvar leads to profound purposes from a scientific perspective. The natural life of living beings continues due to the constant rain. But if it does not rain, the sea will also dry up. Without rain, even the green grass would perish without any intelligent life. If the fail, the farmer will not be able to plow the land. Hunger will afflict the lives of the world. It is rain that spoils life and protects those who have lost their wealth in life. If the rain fails, both charity and penance will be in vain. Not only this, the one-a-year festival will also not take place. Through the authority of the sky, the poet Thiruvalluvar has impressed upon the minds of the people the benefits and misfortunes that are achieved by water.

### தோற்றுவாய்

உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இதில் பல மொழிகளுக்கு எழுத்து வடிவங்கள் இல்லை என்பதால் பயன்பாட்டுக்குக் கொண்டுவர முடியாமல் உள்ளன. ஆனால் சில மொழிகள் மிகப் பழமையானதாகவும் இலக்கியத்தில் சிறந்து விளங்குவதாகவும் உள்ளன. இவற்றுள் சில மொழிகளைச் செம்மொழிகள் என்று அடையாளப்படுத்துகின்றனர். அத்தகு சிறப்பு வாய்ந்த தாய்த்திரு மொழியாகிய தமிழ்மொழியும் செம்மொழி என்ற தகுதியைப் பெற்றிருப்பது மனமகிழ்வை நல்குகின்றது. இத்தகைய சீர்மிகு சிறந்த மொழியாகிய தமிழ்மொழியில் செவ்வியல் இலக்கியங்கள் என்று 41 நூல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் வரிசையில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும் ஒன்றெனத் திகழ்கின்றது.

உண்மை மற்றும் தர்க்கத்தின் அடிப்படையில் ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டறிந்து, முறையான அறிவை வளர்க்கும் ஒரு துறை அறிவியல் எனப்படுகின்றது. இது இயற்கையையும் பிரபஞ்சத்தையும் புரிந்துகொள்ள உதவுகின்றது. அறிவியல் என்பது அறிந்துகொள்ளுதல் எனப் பொருள்படும் Scientia எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அறிவியல் என்பதற்குப் பலவேறு சொற்கள் உள்ளன. அவற்றுள் அறிவாய்வியல் (Epistemology) மற்றும் விஞ்ஞானம் (Science) ஆகியவை அடங்கும். அறிவாய்வியல் என்பது அறிவைப் பற்றிய அறிவியலைக் குறிக்கின்றது. அதே சமயம் விஞ்ஞானம் என்பது அறிவியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளைப் பொதுவாகக் குறிக்கப்பயன்படுகின்றது[1,2]. இதன் அடிப்படையில் உலகப் பொதுமறையான திருக்குறளில் தெய்வப் புலவரான திருவள்ளுவர் தனது இரண்டாவது அதிகாரமான வான்சிறப்பில் மழைநீர்ச் சுழற்சி குறித்துக் கூறியுள்ளதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

### மழை

வளிமண்டலத்தில் உள்ள நீராவியானது ஒடுங்கி நீர்மத்துளிகளாக மாறி, ஈர்ப்பு விசையின் காரணமாக மேகங்களிலிருந்து நிலத்தை நோக்கி விழும் நீர் மழை என்று பொருள்படுகின்றது. "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை என்ற விளம்பிநாகனார் பாட்டும் வானின் இன்றியமையாமையைக் காட்டுகின்றது. வானின் இன்றியமையாமை உணர்த்தி அது வணங்கத் தக்கவைகளுள் ஒன்று என்று உய்த்துணர வைத்த வள்ளுவர் வழியைப் பின்பற்றிய சிலம்பு, "மாமழை போற்றுதும்" என வாழ்த்துக் கூறியது"[3] என்கிறார் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர். இது பொதுவாக மேகத்திலிருந்து பொழியும் நீராகக் குறிப்பிடப்படுகின்றது. வளிமண்டலக் காற்றில் உள்ள நீராவியானது குளிர்ந்து நீர்மத்துகள்களாக மாறுகின்றது. இந்தத் துளிகள் ஒன்றாகச் சேர்ந்து மேகங்களை உருவாக்குகின்றன. மேகங்களில் உள்ள நீர்மத்துளிகள் ஈர்ப்பு விசையின் காரணமாகத் தங்களுக்குள் இணைந்து, மிகவும் கனமாகி, கீழே விழத் தொடங்கும். இதுவே மழை எனப்படுகின்றது. பண்டை நாளில் மக்கள் மழையின் இயக்கத்தை நன்கு அறிந்து அதன் அடிப்படையில் தன் வாழ்வியல் தேவைகளை அமைத்துக் கொண்டனர். பருவம் தொடங்கும் முன் மழை பெய்யும் வாய்ப்பினை மேகத்தின் இயக்கத்தைக் கொண்டு கணித்து அதற்கு ஏற்றாற் போல வேளாண் தொழிலின் தொடக்க கூறுகளை அமைத்துக் கொண்டனர்[4] என்கிறார் ஆய்வாளர் சு. இராமமூர்த்தி. மழை தவிர தூறல், பனி, ஆலங்கட்டி மழை, உறைபனி மழை போன்ற மழைப்பொழிவின் பல்வேறு நீர்ம வடிவங்களும் உள்ளன. மழைநீரானது நிலத்தடி நீர் ஆதாரங்களை நிறைவு செய்யவும் நீர் ஆதாரங்களில் கலக்கவும் உதவுகின்றது.

### மழையின் வேறு பெயர்கள்

மழையின் வேறு பெயர்களில் மாரி, தூறல், சாரல், கனமழை, அடைமழை, ஆலி, புறவு, அமிர்தம் போன்றவை அடங்கும். இவை ஒவ்வொன்றும் மழையின் வெவ்வேறு தன்மைகளைக் குறிக்கின்றன.

1. மாரி - இதமாகவும் மிதமானதாகவும் பெய்யும்மழை
2. தூறல் - மிக மெல்லியதாகவும் இலேசாகவும் பெய்யும் மழை
3. சாரல் - தூறலை விடச் சற்று அதிகமாகப் பெய்யும் மழை
4. கனமழை - கனமான துளிகளுடன் பெய்யும் மழை
5. அடைமழை - விடாமல் தொடர்ந்து வானத்தை அடைத்துப் பெய்யும் மழை
6. ஆலி - ஆங்காங்கே பரவலாகப் பெய்யும் மழை
7. புறவு - இதுவும் மழையைக் குறிக்கும் ஒரு சொல்

இவ்வாறாக மழையைக் குறிப்பதற் வேறுவேறு சொற்கள் பயன்பாட்டில் இருக்கிறதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**மழைநீர்ச் சுழற்சியின் முக்கியப்படிகள்**

1. ஆவியாக்கம் (Evaporation): சூரியனின் வெப்பத்தின் காரணமாகக் கடல்கள், ஆறுகள் மற்றும் பிற நீர்நிலைகளில் உள்ள நீர் ஆவியாகி நீராவியாக வளிமண்டலத்திற்கு மேலெழுகிறது. இதனுடன் தாவரங்களில் இருந்து நிகழும் ஆவியாக்கமும் (transpiration) இணைகிறது.
2. சுருங்குதல் (Condensation): வளிமண்டலத்தில் மேலெழுந்த நீராவி குளிர்ந்த காற்றின் தாக்கத்தால் குளிர்ந்து சிறிய நீர்த்துளிகளாக அல்லது பனிக்கட்டிகளாக மாறி மேகங்களை உருவாக்குகிறது.
3. மழைப்பொழிவு (Precipitation): மேகங்களில் உள்ள நீர்த்துளிகள் ஒன்றிணைந்து பெரிதாகும்போது, அவை புவியீர்ப்பு விசையின் காரணமாக மழை, பனி அல்லது ஆலங்கட்டி மழை போன்ற வடிவங்களில் மீண்டும் பூமிக்குத் திரும்புகின்றன.
4. சேகரிப்பு (Collection): மழைநீர் ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் கடல்களில் சேகரிக்கப்படுகிறது அல்லது நிலத்தடி நீராக ஊடுருவிச் சேமிக்கப்படுகிறது. இந்த நீர் மீண்டும் ஆவியாக்கத்தின் மூலம் சுழற்சியில் ஈடுபடுகிறது.

**வான் சிறப்பு**

வான் சிறப்பு என்பது திருக்குறளின் இரண்டாவது அதிகாரமாகும். இதன் பொருள் மழையின் முக்கியத்துவம் மற்றும் அதன் வாழ்வியல் தாக்கங்கள் ஆகும். மழை இல்லாவிடில் உலகில் எதுவும் நிலைத்து நிற்காது என்பதையும், மழை உயிர்களுக்கு அமிழ்தம் போன்றது என்பதையும் இவ்வதிகாரம் விளக்குகிறது. நிலவளம், கடல்வளம், உயிர்வளம் மற்றும் உலக ஒழுங்கு ஆகிய அனைத்தும் மழையைச் சார்ந்துள்ளன. ஊற்று நீர், ஆற்று நீர், கடல் நீர் முதலியவற்றிற்கு இல்லாத அமிழ்தத் தன்மை வான் நீராகிய மழைக்கு மட்டும் இருப்பதைப் பார்த்தால் வான் வெளியிற் கலந்து விளங்கிக் கொண்டிருக்கும் மிக நுட்பமாகிய ஒரு முழுமுதற் பொருளின் அமிழ்தத் தன்மை அதாவது நிறைவேற்றுத் தன்மை மழையிற் கலந்து வருகிறதென்பது ஆழ்நது கவனிக்குமிடத்துப் புலப்படும்[5] என்கிறார் புலவர் மு. தெய்வ நாயகம். மழை இல்லையெனில் பசும்புல் கூட முளைக்காது. தானம், தவம் போன்ற அனைத்து நற்செயல்களுக்கும் மழையே அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. வானத்திலிருந்து மழை பொழிவதால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. மழைநீரை அருந்தும் உயிர்களுக்கு அது அமிழ்தமாகும். மழை பொய்த்து விட்டால் கடல் சூழ்ந்த விரிந்த உலகிலும் பசியும் வறுமையும் ஏற்படும். மழை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது; அதே சமயம் அது உயிர்களின் வாழ்வாதாரமாகவும் திகழ்கிறது.

**மழை இன்றேல் நீரும் உயிரும் இல்லை**

உலகில் அனைத்து உயிர்களும் வாழ நீர் அவசியமானதாகும். நீர் வேதியியல் அடிப்படையில் இரண்டு ஹைட்ரஜன் மற்றும் ஒரு ஆக்ஸிஜன் ($H_2O$) அணுக்களால் ஆனது. இது திண்மம், திரவ மற்றும் வாயு என மூன்று நிலைகளில் காணப்படுகிறது. உயிரினங்களின் உடல் செயல்பாடுகளுக்கு நீர் இன்றியமையாததாகும். பூமியின் மேற்பரப்பில் சுமார் 71% பகுதி நீரால் மூடப்பட்டுள்ளது (WHO, 2022)[6]. ஆனால் இதில் 97.5% உப்பு நீராகவும், மிகச் சிறிய அளவே (2.5%) நன்னீராகவும் உள்ளது. அந்த நன்னீரின் பெரும்பகுதி பனிக்கட்டிகளாகவும் நிலத்தடி நீராகவும் இருப்பதால், மனிதர்கள் நேரடியாகப் பயன்படுத்தக் கூடிய மேற்பரப்பு நன்னீர் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. வான்துளி வீழ்ந்தால் அல்லாமல் பசும்புல்லின் தலையையும் காண முடியாது. அதாவது மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல் பசும்புல்லின் தலையையும் காண முடியாது என்பது இதன் பொருள். இதன் உட்கருத்தையும் கவனிக்கலாம். ஓரறிவுயிராகிய பசும்புல்லின் வளர்ச்சிக்குக் கூட விசும்பின் துளி தேவை எனக் கூறப்படுகிறது. துளி என்பது மழைத்துளி எனக் கூறலாம். ஆனால் கூர்ந்து கவனிக்கும் போது வள்ளுவர் மழைத்துளியைத் தான் சொல்லி இருப்பாரா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. இவ் அதிகாரத்தின் முதற்குறட்பாவில் வள்ளுவர் வானை அமிழ்தமாகக் கூறி இருப்பதால் விசும்பின் துளியை அமிழ்தத் துளி என்றே கூறுகிறார். அமிழ்தமாக விளங்குவது வான் அல்லது விசும்பு. எனவே அதன் ஒரு பகுதி விசும்பின் துளி. ஓரறிவுயிராகிய பசும்புல்லின் வளர்ச்சிக்குக் கூட வானமிழ்தத்தின் சிறு பகுதி தேவை[7] என்கிறார் ஆ. கிறிஸ்டோபர். மழையே பூமியில் உள்ள நீர்நிலைகளை நிரப்பி, ஓடைகள், ஆறுகள் மற்றும் நதிகளாக மாறி, நிலத்தடி நீராகவும் சேமிக்கப்படுவதற்கான முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. நீர்இன்றி எந்த உயிரினமும் வாழ முடியாது. மனிதர்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்திற்கும் நீர் அத்தியாவசியமானதாகும். விவசாயம் போன்ற பொருளாதாரத் துறைகள் முழுமையாக மழையைச் சார்ந்தே உள்ளன. எனவே, மழை இல்லாவிடில் ஒரு நாட்டின் பொருளாதாரமே கடுமையாக வீழ்ச்சியடையும். உலகம் வாழ நீர் வேண்டும்; நீர் பெருக மழை வேண்டும் என்ற கருத்தின்படி, மழை இல்லாமல் உலகில் வாழ்வு நிலைத்திருக்க முடியாது. வானிலிருந்து வரும் மழைத்துளி இல்லையெனில், ஓரறிவு உயிரான பசும்புல் கூட நிலத்தில் தலையெழுப்ப முடியாது என்பதைக் கீழ்க்கண்ட குறள் விளக்குகிறது:

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது** **(குறள் - 16)**

அதேபோல், நீர் இல்லாமல் உலகமே நிலைக்காது என்பதையும், மழை இல்லாமல் உலக ஒழுங்கும் சிதைவடையும் என்பதையும் கீழ்க்கண்ட குறள் தெளிவுபடுத்துகிறது:

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு** **(குறள் - 20)**

இந்த இரண்டு குறட்பாக்களும் மழையின் அவசியத்தையும், உயிரியல் மற்றும் சமூக ஒழுங்கின் அடித்தளமாக நீர் விளங்குவதையும் வலியுறுத்துகின்றன.

**மழை பொய்த்தால் கடலும் வற்றும்**

மழை பொய்த்தல் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் பெய்ய விழுக்காடு வேண்டிய காலமுறை மழை பெய்யாமல் போவதைக் குறிக்கின்றது. புவியின் மேற்பரப்பு 71 விழுக்காடு நீரால் ஆனது. பசிபிக், அட்லாண்டிக், இந்துமகா சமுத்திரம் மற்றும் ஆர்க்டிக் ஆகியவை பேராழிகளாகும். ஒவ்வொரு பேராழியும் கடல்கள், விரிகுடாக்கள், வளைகுடாக்கள் மற்றும் ஜலசந்திகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டவை[8] என்கிறார் டாக்டர் ஏ.ஆர். இராவதி. வானிலை மாற்றங்கள், காற்றழுத்த வேறுபாடுகள், மேக உருவாக்கக் குறைபாடுகள் போன்ற அறிவியல் காரணிகளால் ஏற்படும் ஒரு

இயற்கை நிகழ்வாகும். மேகங்களில் உள்ள நீர்த் துளிகள் கனமடைந்து புவியீர்ப்பு விசையின் காரணமாகக் கீழே விழும்போது மழை பெய்கிறது. ஆனால் சில நேரங்களில் வளிமண்டலத்தில் ஏற்படும் வெப்பநிலை மற்றும் அழுத்த வேறுபாடுகள், நீராவி சுருங்குதலைத் தடுத்து மழை உருவாவதைத் தடுக்கும்; இதனால் மழை பொய்க்கும் நிலை ஏற்படுகிறது. மேகங்கள் கடலிலிருந்து நீரை எடுத்துச் சென்று மீண்டும் மழையாக அதே கடலிலேயே பொழிவதன் மூலமே கடல்நீர் சுழற்சி சமநிலையாக நீடிக்கிறது (Gleick, 2019)[9]. இந்தச் சுழற்சி தடைபட்டால், கடலின் நீர்மட்டமும் குறையத் தொடங்கும். மழை தொடர்ந்து பொய்த்தால், பெருங்கடலாக இருந்தாலும் அதன் நீர்வளம் குன்றி வறட்சியடையும் நிலை உருவாகலாம் (NASA, 2023; USGS, 2023)[10]. இக்கருத்தை திருவள்ளுவர் கீழ்க்கண்ட குறட்பாவில் விளக்குகிறார்:

**நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்** **(குறள் - 17)**

இந்தக் குறள், மழைநீர்ச் சுழற்சி பாதிக்கப்படும்போது கடலின் இயற்கைச் சமநிலையும் சீர்குலையும் என்பதை வலியுறுத்துகிறது.

### மழை பொய்ப்பின் தவிர்க்கப்படும் உழவு

மழை பொய்க்கும் காலங்களில் உழவுப் பணிகள் பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றன. போதுமான மழை இல்லாததால் நிலத்தில் ஈரப்பதம் குறைந்து, மண் கடினமாகி உழவுக்கு ஏற்ற நிலை இல்லாமல் போகிறது. இதனால் பயிர்ச் சாகுபடி செய்ய முடியாது. இத்தகைய சூழலில் விவசாயிகள் வழக்கமான உழவுப் பணிகளை நிறுத்தி, அடுத்த பருவமழைக்காக நிலத்தைத் தயார்படுத்துகின்றனர். உழவே உணவுப் பொருள் உற்பத்தி செய்வது ஆதலின் தொழில்களில் உழவு முதலிடம் பெறுவதாயிற்று. உழவு வேளாளருக்குரிய சிறந்த தொழில்[11] என்கிறார் சரவணையா. மழை இல்லாமையாலும் அல்லது அதிகப் புயல் மழையாலும் உழவர்கள் வயலில் இறங்கி உழவு செய்ய முடியாத நிலை உருவாகிறது. இதனைத் திருவள்ளுவர் கீழ்க்கண்ட குறட்பாவில் குறிப்பிடுகிறார்:

**ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்** **(குறள் - 14)**

இந்தக் குறள், மழைவளம் குறையும்போது உழவுத் தொழில் முற்றிலும் பாதிக்கப்படுவதைத் தெளிவுபடுத்துகிறது.

### தானம், தவம் தவறுதல்

தானம் (Donation) செய்வது பசி, வறுமை மற்றும் சமூக அநீதிகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகிறது. ஏழைகள், வறியவர்கள் மற்றும் தேவையுள்ளோருக்கு பணத்தையோ அல்லது பொருட்களையோ தானம் செய்வது மகத்தான நன்மைகளைத் தரும்.[12] தானம் செய்பவர்களுக்கு மனநிறைவு, மகிழ்ச்சி மற்றும் நேர்மறை உணர்வுகள் ஏற்படுகின்றன என்பது உளவியல் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தான தர்மங்களை வெளிப்படையாகச் செய்வதை விட, ரகசியமாகச் செய்வது மிகவும் சிறந்தது என்று இஸ்லாம் கூறுகிறது. இது உள்ளத்தில் இஹ்லாஸ் (தூய்மை) தன்மையை வளர்க்கும்.[13] அதேபோல், தவம் (Meditation) செய்வது மனஅழுத்தத்தைக் குறைத்துக் கவனத்தை அதிகரிக்க உதவுகிறது. இது மனஅமைதியை மேம்படுத்துவதோடு இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் இதயத்துடிப்பைச் சீராக்கவும் உதவுகிறது. தவம் என்பது வெறும் கண்களை மூடிக் கொண்டு இருப்பது மட்டுமல்ல, விழித்துக் கொண்டு விழிப்புணர்வுடன் (Awareness) இருப்பதே உண்மையான தவம் எனச் சித்தர்கள் மற்றும் ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.[14] தவம் புலன்கள் மற்றும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே,

தானமும் தவமும் மனிதனின் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் நேரடியாகத் தொடர்புடைய நன்மைகளை வழங்குகின்றன. தானம் சமூக இணைப்பை வலுப்படுத்தும் செயற்பாடாகவும், தவம் தனிநபர் மனஒருமைப்பாட்டை வளர்க்கும் செயற்பாடாகவும் விளங்குகின்றன. இருப்பினும், மழை இல்லாத சூழலில் இத்தகைய அறச் செயல்கள் கூட முழுமையாக நடைபெறாது என்பதைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை அவர் கீழ்க்கண்ட குறட்பாவில் விளக்குகிறார்:

**தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்** **(குறள் - 19)**

இந்தக் குறள், மழை இல்லையெனில் உலகில் நடைபெறும் தானமும் தவமும் நிலைபெறாது என்பதைக் கூறுகிறது. மேலும், மழை பொய்த்தால் தெய்வ வழிபாடுகள் மற்றும் திருவிழாக்கள் ஆகியவை நடைபெறாது என்பதையும் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்:

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு** **(குறள் - 18)**

இந்த இரு குறட்பாக்களும் மழையின் குறைபாடு சமூக, ஆன்மிக மற்றும் பண்பாட்டுச் செயல்பாடுகளையும் பாதிக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

### கெடுப்பதும் காப்பதும் மழை

மழை என்பது பூமியில் உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை இயற்கைச் சுழற்சியின் முக்கிய அங்கமாகும். மழை அறிவியல் என்பது மழை உருவாகும் செயல்முறை, அதன் பரவல் மற்றும் அதன் விளைவுகள் ஆகியவற்றை விளக்கும் துறையாகும். இது பூமியில் உயிர் வாழ்வைத் தொடரச் செய்கின்ற ஒரு அத்தியாவசிய இயற்கைச் சுழற்சியாகும். ஆனால், மழை அளவுக்கு அதிகமாகப் பெய்யும் போது வெள்ளம், நிலச்சரிவு போன்ற பேரழிவுகளையும் ஏற்படுத்துகிறது. அதேநேரத்தில், மழைநீர் சேகரிப்பு போன்ற அறிவியல் முறைகள் மூலம் மழைநீரைப் பாதுகாப்பாகச் சேமித்து மீண்டும் பயன்படுத்த முடியும். இது எதிர்கால நீர்த் தேவையைப் நிறைவு செய்ய உதவுகிறது. மழைஇல்லாமலும், அதீத மழையாலும் உயிர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மழை இல்லையெனில் உயிர்களின் வாழ்வு கெடுகிறது; அதேசமயம் மழை வளம்குறைந்தவர்களுக்குத் துணையாக இருந்து அவர்களை வாழ்விக்கிறது. இதனைத் திருவள்ளுவர் கீழ்க்கண்ட குறட்பாவில் விளக்குகிறார்.

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை** **(குறள் - 15)**

இந்தக் குறள், மழை என்பது ஒருபுறம் அழிவையும், மறுபுறம் காப்பாற்றும் ஆற்றலையும் கொண்ட இரட்டை இயல்புடைய இயற்கை நிகழ்வாக விளங்குகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

### மழை பொய்ப்பின் பசி நிலைக்கும்

மழை பொய்க்கும் போது பசி ஏற்படுவதற்கான காரணங்கள் வெறும் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான நீர்ப் பற்றாக்குறையை மட்டும் சார்ந்தவை அல்ல. இது பல இயற்கை, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரக் காரணிகளின் ஒருங்கிணைந்த விளைவாக உருவாகும் ஒரு சிக்கலான செயல்முறை ஆகும். மழை இல்லாததால் முதலில் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்து, உணவுப் பற்றாக்குறை உருவாகிறது. அதன் விளைவாகச் சந்தை விலைகள் உயர்ந்து, பொதுமக்களின் வாங்கும் திறன் குறைகிறது. இதன் தொடர்ச்சியாகப் பொருளாதாரச்சீர்குலைவு, வேலைவாய்ப்புக்குறைவு மற்றும் சமூகப் பிரச்சினைகள் போன்றவை அதிகரிக்கின்றன. மேலும், பருவநிலை மாற்றம் (climate change) இந்த நிலையை மேலும்

தீவிரப்படுத்துகிறது. இவ்வாறு மழை பொய்த்தல் என்பது ஒரு சங்கிலித்தாக்கமாக (chain effect) சமூகத்தின் பல்வேறு தளங்களையும் பாதிக்கிறது. எனவே, வேளாண்மைத் துறையை மேம்படுத்து தல், நீர்வள மேலாண்மையை வலுப்படுத்துதல் மற்றும் வறட்சியின் தாக்கத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள் அவசியமாகின்றன. பசி என்பது உண்ண உணவு இல்லாததால் உடலில் ஏற்படும் அசௌகரியம் அல்லது வலி[15] என்று ஐநா குறிப்பிடுகின்றது. விண்ணிலிருந்து பெய்யும் மழை பொய்த்து விட்டால், கடல் சூழ்ந்த அகன்ற உலகாக இருந்தாலும் பசியானது உயிர்களின் உடலினுள் நிலைத்து நின்று அவற்றை வருத்தும் என்பதைத் திருவள்ளுவர் கீழ்க்கண்ட குறட்பாவில் விளக்குகிறார்:

**விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி** **(குறள் - 13)**

இந்தக் குறள், மழை இல்லாமை என்பது உலகளாவிய பசியையும் வாழ்வாதார நெருக்கடியையும் உருவாக்கும் அடிப்படைக் காரணமாகும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

### உயிர்களுக்கு அமிழ்தம் மழை

மழை உயிர்களுக்கு அமிழ்தம் போன்ற பயனை வழங்குகிறது என்பது அறிவியல் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகும். மழைநீர் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் முதன்மையான இயற்கை நீர்வள ஆதாரமாக விளங்குகிறது (NASA, 2023)[16]. இது நீர்ச் சுழற்சி (water cycle) செயல்முறையைத் தொடர்ச்சியாக இயக்குவதில் முக்கியபங்கு வகிக்கிறது. எனவே, மழை இல்லாமல் நீர்ச் சுழற்சி சீராக நடைபெற முடியாது. மழைநீர் பயிர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இது நேரடியாக உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கிறது மற்றும் உலக உணவுத் தேவையை நிறைவு செய்ய உதவுகிறது. மழை மேகத்திலிருந்து பொழிந்து உலகம் நிலைபெற்று வாழ்வதனால், அந்த மழை உலகத்தில் வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று அறியத்தக்கதாகும்.[17] மேலும், உயிரினங்களின் உடலியல் செயல்பாடுகளுக்கும் நீர் இன்றியமையாதது என்பதால், மழைநீர் அனைத்து உயிர்களின் வாழ்வாதாரமாகக் கருதப்படுகிறது. மழைநீரைச் சேமித்துப் பாதுகாப்பது எதிர்கால நீர்த் தேவைகளை நிறைவு செய்ய மிகவும் அவசியமானதாகும். மழை இல்லாவிட்டால் எந்த உயிரினமும் நீண்டகாலம் உயிர்வாழ முடியாது என்பது அறிவியல் உண்மை ஆகும். எனவே, மழை என்பது உயிர்களுக்கான அமிழ்தம் எனக் கருதப்படுவது பொருத்தமானதாகும். இதனைத் திருவள்ளுவர் கீழ்க்கண்ட குறட்பாவில் விளக்குகிறார்:

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று** **(குறள் - 11)**

இந்தக் குறள், மழை உலகின் உயிர் வாழ்வைத் தொடரச் செய்கின்ற இன்றியமையாத அமிழ்தம் போன்றது என்பதை வலியுறுத்துகிறது.

### இறுவாய்

இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக, வானிலிருந்து வரும் மழைத்துளி இல்லையெனில் பசும்புல் கூட நிலத்தில் தலையெழுப்ப முடியாது என்பதையும், நீர் இல்லாமல் இந்த உலகமே நிலைக்க முடியாது என்பதையும், மழை இல்லையெனில் உலக ஒழுங்கும் சீர்குலையும் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. மழை பொய்த்தால் கடல்நீர் கூட வறண்டு போகத் தொடங்கும்; மழை இல்லையெனில் அறுவடை செய்யும் உழவர்கள் ஏர்ப் பிடித்து உழவுத் தொழில் செய்ய இயலாது. மேலும், தெய்வத்தின் பொருட்டு நடைபெறும் தானமும் தவமும் நடைபெறாது; வானோர்களாகிய தேவர்களுக்கு ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்களும் நிறுத்தப்படும். இவ்வாறு மழை என்பது உயிர்களின் வாழ்வைத் தீர்மானிக்கும் அடிப்படை இயற்கை ஆற்றலாக விளங்குகிறது.

மழை ஒருபுறம் உயிர்களின் வாழ்வைக் கெடுக்கவல்லதாயினும், மறுபுறம் வளம் குன்றியவர்களுக்குத் துணையாக இருந்து அவர்களை வாழ்விக்கவும் செய்கிறது. மழை இல்லாதபோது பசியானது உடலினுள் நிலைத்துநின்று உயிர்களை வருத்துகிறது. எனவே, மழை உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் அமிழ்தம் போன்றதாக விளங்குகிறது என்ற அறிவியல் மற்றும் இலக்கிய உண்மை இவ்வாய்வின் மூலம் தெளிவாக அறியப்படுகிறது.

**நன்றி**

இவ் ஆய்வுக் கட்டுரை வழங்க உடல் மற்றும் உள்ள வளம் கொடுத்த எல்லாம் வல்ல ஏக இறைக்கு முதற்கண்நன்றி! இப்பூநிலஉலகில்அமைந்துள்ளதென்கொரியநாட்டில்செஜோங்பல்கலைக்கழகத்தில் 08.11.2025 அன்று - முதல் உலகளாவிய திருக்குறள் மாநாட்டில் (ITCSK 2025) இவ் ஆய்வுக் கட்டுரையானது சமர்ப்பிக்கப்பட்டது. இக்கட்டுரையை முதன்மைக் கட்டுரைகளுள் ஒன்றாகத் தெரிவு செய்த தென்கொரியா தமிழ் ஆராய்ச்சி அமைப்பிற்கு (SKTRA) என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் பல..........!

**மேற்கோள்கள்**

1. UNESCO. (2010). Water and Climate Change: Understanding the Hydrological Cycle. United Nations Educational, Scientific and Cultural Organization.
2. NASA Earth Science Division. (2023). The Water Cycle. Retrieved from https://earthobservatory.nasa.gov
3. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம் (பாயிரவியல்), ப. 23
4. சு. இராமமூர்த்தி, பருவங்களில் மருதநிலம் (அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்குப் பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு), ப. 204
5. புலவர் மு. தெய்வ நாயகம், வள்ளுவர் சிறப்பிக்கும் “வான்” எது?, ப. 13
6. World Health Organization (WHO). (2022). Water, Sanitation and Health. WHO Publications.
7. ஆ. கிறிஸ்டோபர், திருக்குறள் அடிப்படை கிறிஸ்தவமே, விளக்க உரை பகுதி: 1 - அறத்துப்பால், ப. 40
8. டாக்டர் ஏ.ஆர். ஐராவதி (ப.ஆ.), புவியியல் தொகுதி I & II, ப. 30
9. Gleick, P. H. (2019). Water Resources and Global Sustainability. Oxford University Press.
10. U.S. Geological Survey (USGS). (2023). The Water Cycle. United States Department of the Interior.
11. சரவணையா, மேழி விளக்கம் (சென்னிமலையாண்டவர் மகிமை கூறும் வேளாளர் வரலாற்று நூல்), முகவுரை
12. https://tamildawah.com/donate/
13. https://islamkalvi.com/?p=2056
14. https://tamil.vallalyaar.com/open&eyed&meditation/
15. https://www.bbc.com/tamil/articles/cgkex47047do
16. NASA Earth Science Division. (2023). The Water Cycle. Retrieved from https://earthobservatory.nasa.gov
17. https://www.kuralthiran.com/Kural Thiran/Kural Thiran0011.aspx

**துணை நூற்பட்டியல்**

1. திருக்குறள் - கழக வெளியீடு, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் திருநெல்வேலி, சென்னை - 01, இரண்டாம் பதிப்பு ஏப்பிரல் 1928.
2. தண்டபாணி தேசிகர், ச. - திருக்குறள் உரைக் களஞ்சியம் (பாயிரவியல்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021, முதற்பதிப்பு 1981.

3. இராமமூர்த்தி, சு. - பருவங்களில் மருதநிலம், அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்குப் பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு, தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை, காரைக்குடி - 630 003, செப்டம்பர் 2021.
4. பரமேஸ்வரி. மு. - சங்க இலக்கியத்தில் நீர்மேலாண்மை, (முனைவர் (பிஎச்.டி.) பட்டப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்ற ஆய்வேடு, தமிழ்த்துறை, அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), நந்தனம், சென்னை - 600 035, பிப்ரவரி 2020.